**கோபிக்கு பிறந்தநாள் வாழ்த்து!**
**01-10-2019**

நாற்பத்து இரண்டாம் அகவை தன்னை,
நலமுடன் அணைந்து ஏகி,
கற்பகத் தருவைபோலே
காதல்சீர் மக்கள் தம்மொடு,
அற்புத வாழ்வு தன்னில் பெறும்
அருஞ்சுவை யாவும் அடைந்து,
நற்சீர் தம்பியோடும்
நன்னிய மனையாளொடும்,
எந்நாளும் வாழ்க நிறைந்து!

**செல்வன் மதுசூதனன் (12-11-2019)**

மதுவிதழ் தனிலே முறுவலும் விரியும்;
மதுவவன் பெயரை மனத்துடன் அழைத்தால்!
மதுதரும் பூக்கள் மணத்தையும் தருமே!
மதுமொழி கேள்வன் அனைத்து மகிழ,
மதுவவன் தனக்கு பிறந்தநாள் வாழ்த்து!

**பிறந்தநாள் வாழ்த்து (12-06-2020)**

கானல் வரியழகோ கற்பனைத் தமிழழகோ!
நாணல் வளைந்து விழும் நந்நீர் ஓட்டமென,
வேனிற் பொழுததுவும் விரவி நடந்த பின்பு,
ஆனிக்கு முன்னே அவதாரம் செய்து விட்டீர்!

தானாய் இருவருமே தடம் பதித்து ஒருநாளில்,
இனியப் பிறப்பெடுத்தீர் இந்நாள் **ஜூன்- 12ல்!**
நற்பெருமைகளை நானிலத்தில் தான் கொள்வீர்!
கனிவுசீர், **பிரகாஷ்-பிரஷாந்த்** வாழியவே!

**ஆயிரம் பிறைகண்டாய் போற்றி!**
**30-08-2020**
**வடகை பா. கோபாலக் கிருஷ்ணன்**

என்பதாம் அகவை தன்னை
இனியதாய் நிறைவு செய்து,
ஆயிரம் பிறைகள் கண்ட
அருந்தவப் பேற்றினோடும்,
இனியதாம் இல்லறம் தன்னை
இணையிலா நாகத்துடன் கொண்டு,
கனிவுசீர் கற்பகம் தன்னை
தருவாய்ப் பெற்று, வளர்த்து,

இனியன் இரவிசங்கர் தானும்
கைத்தலம் பற்றக் கொடுத்து,
கனிவுடை கார்த்திக் என்னும்
சீரியப் பெயரனை அடைந்தீர்!
இனிவாழும் காலம் முழுதும்
இனியதாய் வாழ்தல் வேண்டும்!
நனிசீர் மனத்தினோடு யானும்
நன்னிய இறையை வேண்டுவனே!

**12-11-2015 மதுசூதனன்**

மதுவதும் மருந்தே!
மதுவதும் உணவே!
மதுவதும் மயக்கும்!
மதுவவன் பெயரே!
மதுவிதழ்சிந்தும்;
மணிச் சொலும் மயக்கும்!
வாழ்க பல்லாண்டு!!
என்றும் மாறாத அன்புடன்,

**பிரகாஷ் & பிரஷாந் (12-06-2018)**

மன்னிய உறவினோடும்,
மருவிலா அன்பினோடும்,
இன்னிய நாளாம் இதனில்,
இதயம் உவந்து நிறைந்தே;
பொன்நிகர் மக்கள் நீவிர்,
*பிரகாஷ்*, *பிரசாந்த்* தாமே;
என்னாளும் வாழ்க வென்றே,
இனியதாய் வாழ்த்துவோமே!